# சுதந்திரன்

SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2009
தை 26
ஸபர் 29
புதன் (8-2-1978)
நிருவியது 1947
புத்தகம் 31
இதழ் 70
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 35


# ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள்!

அன்பு நண்பா!

ஒரு நாட்டை — அல்லது ஓர் இனத்தை—அடக்கியாண்டிட அந்த நாட்டைதனது அதிகாரப்பிடிக்குள் இருக்கின்ற ஒரு 'காலனி' நாடாக என்றென்றும் வைத்துக் கொண்டிருந்திட விரும்புகின்ற எந்த ஓர் ஏகாதிபத்திய காலனித்துவ ஆட்சியும், அந்த நாட்டில் அல்லது அந்த இனத்தில் தனக்கு குற்றேவல் செய்யக்கூடிய, வீசியெறியப் படும் எலும்புத் துண்டுகளுக்கு பல்லிளிக்கின்ற கங்காணிகளை—நல்ல அடிமைகளை தேடிப்பிடித்து, அவர்களுக்குத் தலைப்பாகை கட்டி விட்டு அவர்கள் மூலம் ஏதாவது அற்ப சலுகைகளை கிள்ளியெறிந்து, விடுதலையை நாடித்துடித்தெழுகின்ற மக்களை திசைதிருப்பிட, சாந்தப்படுத்திட முயற்சித்திடுவதும் — விடுதலைக்குக்குரல் கொடுப்போரை புறக்கணித்து ஒதுக்கிடுவதும், அலட்சியப்படுத்துவதும் உலக நாடுகள் பலவற்றிலும் காணுத ஓர் புதுமையல்ல;

மக்களின் உணர்வுகளை—விடுதலை வேட்கையை — பிரதிபலிக்கின்ற உண்மையான தலைவர்களை, இயக்கத்தை புறக்கணித்து—தங்கள் ஏகாதிபத்தியத்துக்கு அதிகார ஆட்சிக்கு யாரால் ஆபத்து ஏற்படாது என்று கருதுகிறார்களோ — யார் தாங்கள் காலால் இட்ட கட்டளைகளையெல்லாம் மறுபேச்சின்றி சிரமேற்கொண்டுசெய்து முடித்திடும் தஞ்சாவூர்ப் பொம்மைகளாக இருப்பார்என்று ஏகாதிபத்தியம் எதிர்பார்க்கிறதோ—அப்படிப் பட்டவர்களை — அற்ப சலுகைகளுக்காக நாட்டின் சுதந்திரத்தையே விலைபேசத் தயங்கிடாத்தரகர்களைத் தேடிப்பிடித்து அவர்கள்மூலம் தாம் கைப்பற்றியுள்ள நாட்டை ஆளுவதுதான் ஏகாதிபத்தியக் காலனித்துவக் கொள்கையாகும்!

தாங்கள் 'காலனி'யாக வைத்திருக்கும் நாட்டுக்கு 'திக்விஜயம்' செய்யும் போதெல்லாம், அந்த நாட்டில் தமக்கு தெண்டனிட, சாமரை வீசிட, பன்னீர் தெளித்திட, பாதம் தாங்கிட, நில பாவாடை விரித்திட, திருப்புகழ்பாடிட, விடுதலை கோருகின்ற இலட்சியவாதிகளை அடையாளம் காட்டிக் கொடுத்திட சிலரை உருவாக்கி வைத்திருப்பதே ஏகாதிபத்திய வாதிகளின் வாடிக்கை; இதற்காகஏகாதிபத்தியம் எதையும் செய்யும்—எவ்வளவும் செலவிடும்;நல்லவனே அல்லவனே, தூய்மையானவனே இல்லையோ, நேர்மையானவனே—அக்கிரமக்காரனே, இவைபற்றி ஏகாதிபத்தியவாதிகளுக்கு அக்கறை ஏற்படுவதில்லை; அவர்களுக்கு தேவை தங்களுக்கு ஏற்ற எடுபிடிகள்; அவ்வளவே!

ஏகாதிபத்தியவாதிகளின்இந்த வழமையானபோக்குக்கு. தமிழ் ஈழத்தைதனது'காலனியாக' வைத்துக்கொண்டிருக்கும் இன்றையசிங்களஏகாதிபத்தியம்கொஞ்சம் கூட மாறுபட்டதல்ல: சோசலிச மந்திரத்தை உச்சரித்தபடி ஏழு ஆண்டுகள் முன்பு இங்கு ஆட்சி நடத்திய சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஏகாதிபத்தியம் முற்றுமுழுதாக தனது கங்காணிகளை வைத்தே தமிழ் ஈழத்தை ஆண்டது; இன்று ஜனநாயகம், தார்மீகம் என்றெல்லாம் வாயளவில் பேசுகின்ற ஐக்கிய தேசியக்கட்சி சிங்கள ஏகாதிபத்தியமும் அதே தர்பாரையே நடத்த முற்பட்டுள்ளதை இப்போது நாம் வேதனையோடு கவனிக்கின்றோம்!

அருளம்பலம்,
குமாரசூரியர்,
துரையப்பா,
விநோதன்,
முருகையா,
நடராசா.

இப்படி கட்சி அமைப்பாளர்கள் என்ற பெயரில் தனது கங்காணிகளை வைத்து தமிழ் ஈழத்தை சுரண்டியது முந்திய சிங்கள ஏகாதிபத்தியம்—இத்தகைய அமைப்பாளர்களால், அறம் நிலைகுலைந்தது பற்றியோ, அதர்மம் தலையெடுத்தது பற்றியோ அம்மையார் அக்கறைகாட்டவில்லை! அவர்களுக்கு வேண்டியிருந்ததெல்லாம் தாங்கள் கிழித்த கோடு தாண்டாத உண்மையான விசுவாசிகள்! மக்கள் எப்படிச் சுரண்டப்பட்டாலும் தங்கள் ஏகாதிபத்தியம் தமிழ் ஈழத்தில் நிலைத்தால் அது போதும் அவர்களுக்கு!

இதே பாதையைத்தான் இன்று தார்மீகம் பேசப்புறப்பட்டிருக்கும் ஐக்கிய தேசியக்கட்சி சிங்கள ஏகாதிபத்தியமும் பின்பற்றத் தொடங்கியிருப்பது இன்று அம்பலத்துக்கு வந்து கொண்டிருக்கிறது. தமிழ் ஈழத்தை தனது 'கட்சி' அமைப்பாளர்களைக்கொண்டு ஆள்வதற்கு ஐ. தே. கட்சி புறப்பட்டிருக்கிறது! தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள், தேர்தல் களத்தில் தூக்கியெறியப்பட்டவர்களைக் கொண்டு, தமிழ்மக்களிடையே காலூன்ற முனைகிறது இன்றைய ஆட்சி!

ஆளும் கட்சி அமைப்பாளர் துண்டுகொடுத்தாலே வேலை!

ஆளும் கட்சி அமைப்பாளர் தலையிட்டால் இடமாற்றம் அல்லது இடமாற்றம் ரத்து!

ஆளுங்கட்சி அமைப்பாளர் சொன்னலே எதுவும் நடக்கும்!

என்பன போன்ற நிலையை இன்றைய அரசு தோற்றுவிக்குமானல் — தனது கட்சி அமைப்பாளர்களை கங்காணிகளாக பயன்படுத்தி—தமிழ் ஈழத்தில் ஊடுருவ ஆட்சியாளர்கள் திட்டமிடுவார்களானல்-அவர்கள் முந்திய அரசிடமிருந்து பாடம் படித்திட வேண்டும்!

முந்திய சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஏகாதிபத்தியம் தமிழ் ஈழத்தில் தனது கட்சி அமைப்பாளர்களைக் கருவியாகக் கொண்டு எத்தனை சலுகைகளை அள்ளி வீசியும் உத்தியோகங்கள் கொடுத்தும், அக்கட்சியால் தமிழ் மக்களிடையே கிஞ்சிற்றும் ஊடுருவமுடியவில்லை — சுதந்திர இலட்சியத்திலிருந்து — விடுதலைப் பாதையிலிருந்து தமிழ் மக்களைப் பிரித்திட முடியவில்லை — இந்த முயற்சியில் அவர்கள் படுதோல்வியே அடைந்தார்கள் என்பதை இன்றைய ஐக்கிய தேசியக் கட்சி ஏகாதிபத்தியமும் புரிந்து கொள்ளவேண்டும்!

கடந்த தேர்தலில் — மரம் தறித்து விழ்த்தப்பட்டதுபோல் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவரது சிபார்சின் பேரி

## அரசியல்மேடை

லேயே காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் 35 பேருக்கு வேலை வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சர் சிறில் மத்தியூ தேசிய அரசுப் பேரவையில் ஒளிவுமறைவின்றி கூறியிருக்கிறதைப் பார்க்கிறபோது—முந்திய ஏகாதிபத்தியம் கடைப்பிடித்து இடறிவிழுந்த அதே பாதையை — அதே வழியையே இன்றைய ஏகாதிபத்தியமும் பிற்பற்றுகிறது என்பது வெளிப்படையாகிவிட்டது. இத்தகைய PATRONAGEPOLITICS தமிழ் ஈழத்தில் படுதோல்வியடைந்தே தீரும் என்பதை அரசு உணர்ந்திடவேண்டும். தனது பாதையை மாற்றிட வேண்டும்!

தமிழ் தேசிய இனத்தைப் பொறுத்த வரை—'சிங்கள ஏகாதிபத்திய காலனித்துவம்' என்ற நாணயத்தின் ஒரு பக்கம் ஐக்கிய தேசியக்கட்சி, மறுபக்கம், சிறீலங்கா சுதந்திரக்கட்சியே தவிர — இரண்டும் ஒரே குட்டையிலூறிய மட்டைகளே தவிர — இரண்டுக்குமிடையே அதிக வேற்றுமை கிடையாது!

—உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

# சுதந்திர தினம் தமிழ் ஈழத்தில் பகிஷ்கரிப்பு!

'சிறீலங்கா'வின் சுதந்திரதினமான பெப்ரவரி 4ம் திகதி நடைபெற்ற அரசாங்கக் கொண்டாட்டங்களை தமிழ்ஈழ மக்கள் பல இடங்களிலும் புறக்கணித்துப் பகிஷ்கரித்தனர்; இதனுல் சுதந்திர தினமான பெப்ரவரி 4-ம் திகதி தமிழ்ஈழம் முழுவதும் கலகலப்பு ஏதுமின்றி சோபை இழந்து காணப்பட்டன. அரசாங்க அதிகாரிகளும் பாதுகாப்பு படைகளுமே தமிழ்ஈழத்தில் நடைபெற்ற இச்சுதந்திரதின நிகழ்ச்சிகளில் பெருவாரியாகப் பங்குபற்றியதைக் காணக்கூடியவாறு இருந்தது.

தமிழ் மக்கள் வழமை போலவே இவ்வாண்டும் பெப்ரவரி 4ம் திகதி சுதந்திரதினகொண்டாட்டங்களை பகிஷ்கரித்தனர். தன்மானம் மிக்க தமிழ் மாணவமாணவியர் இக்கொண்டாட்டங்களில் கலந்துகொண்டு கலை நிகழ்ச்சிநடத்தவோ,பாண்ட் வாத்தியம் வாசிக்கவோ மறுத்துவிட்டனர்.

யாழ்ப்பாணத்தில் ஒரு முக்கிய பெண்கள் கல்லூரியில் 'பாண்ட்' வாத்தியம் வாசிப்பதற்கு வருமாறு மேற்படி வாத்திய கோஷ்டியை சேர்ந்த மாணவிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஆனுலும், தமிழினத்தின் துக்க நாளில், பாண்ட் வாத்தியம் வாசிக்கமுடியாது என்று மாணவிகள் மறுத்தமையினுல், இதற்கு ஏற்பாடு செய்தவர்கள் கடைசி நேரத்தில் ஏமாந்துபோனுர்களாம். இந்தக்கல்லூரி மாணவிகளின் தன்மானத்தை தமிழ் சமுதாயம் போற்றுகிறது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்றசுதந்திரதினக்கொண்டாட்டங்கள் அடைக்கப்பட்ட கிடுகு வேலிக்குப் பின்னுக இரகசியமாக நடைபெற்றது. இதில் கலந்துகொள்வதற்கு பல கலைஞர்களும் பொதுமக்களும் முன்வராததனுல், ஏதோ சம்பிரதாயத்துக்காக இந்தக் கொண்டாட்டம் நடந்து முடிந்தது. மக்கள்நடமாட்டமின்மையால் நகரம் கலகலப்பின்றிக்காணப்பட்டது.

இதே போலவே தமிழ் ஈழத்தின் ஏனைய பகுதிகளிலும் சுதந்திரத்தினக்கொண்டாட்டங்களை புறக்கணித்து தமிழினம் தனது தன்மானத்தைகாப்பாற்றிவிட்டது.

# சன்சோனி ஆணைக் குழு விசாரணை இன்று ஆரம்பம்

1977 ஆகஸ்ட்-செப்டம்பர் இனக்கொலைபற்றி விசாரணை நடத்துவதற்கென நியமிக்கப்பட்டுள்ள சன்சோனி ஆணைக்குழு, தனது விசாரணையை இன்று(8.2.78) புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கிறது. யாழ் பொது நூல் நிலைய மண்டபத்தில் காலை 9,30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த விசாரணையின்போது முதலில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், சி. கதிரவேற்பிள்ளை பா. உ., திரு. வெ. யோகேஸ்வரன் பா. உ. ஆகியோர் சாட்சியமளிப்பார்கள். விசாரணை ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் தினமும் காலை 9.30 முதல், பிற்பகல் 1.30 வரை நடைபெறும்.

# யாழ் இந்துக்கல்லூரியில்

## சுதந்திரன் ஆசிரியர் பேசுகிறுர்!

யாழ் இந்துக்கல்லூரி உயர்வகுப்பு மாணவர் மன்றத்தில் 'மும்மொழித் திட்டம்' என்ற பொருளில் சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் அவர்கள் 9-2-78 வியாழக்கிழமை பிற்பகல் உரையாற்றுகிறுர்.

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லன்! நீ என்னதான் சொன்னாலும் ஜீ. ஜீ. தனிநாட்டுக்கொள்கையை ஏற்றுக்கொண்டார் எண்டு சொல்லுறதை நான் மறுக்கிறன் அவர் ஒற்றுமையை விரும்பினவர் அதுதான்சரி.

வேலு; அப்ப!

செல்லன்! அவர் சும்மா ஏன் கடைசிகாலத்தில தமிழர் ஒற்றுமையை குலைப்பான் எண்டிட்டு தான் பேசாமல் இருந்தவர். கூட்டணி ஆக்களும் செய்யிறது பிழை.

வேலு! என்ன பிழை?

செல்லன்: அவையள் எலக்சன் முடிஞ்சு இவளவு நாளும் ஒருபோராட்டத்திட்டமும் இல்ல சும்மா உணர்ச்சிவசப்பட்டு பேசி வோட்டுக்கேட்டவையள். உதுவும் சாத்தியப்படாது. ஏலுமெண்டால் இவையள் உடனடியாய் தனிநாட்டுப் போராட்டத்தைத் தொடங்கவேணும்.

வேலு: டேய் என்னடா நீயுமென்ன மரத்துக்குக் கீழ நிண்டனியே.

செல்லன்! என்ன?

வேலு: மரத்துக்குக் கீழ சில சாத்திரிமார் இருந்து கொண்டு மனப்பாடமாக்கினதுகளை மாறி மாறி ஆக்களுக்குச் சாத்திரம் சொல்லி சம்பாதிப்பாங்கள் நான் நினைக்கிறன் மரத்துக்குக்கீழ நிண்டால் உப்பிடிப் புத்திதானாய் வரும்போல இப்பிடிப்பட்ட மரத்தடிச்சாத்திரிமாரை நம்பி சில குடும்பங்களே கெட்டுப்போறது கவனம் நீயும் அப்பிடி ஆகிடாத.

செல்லன்: அண்ணே நீ கதையை மாத்தாத. எங்கட குமார் பொன்னம்பலம்கூட உந்தக் கேலிக்கை தமிழ்நாடு சாத்தியப்படாது எண்டுதானே சொல்லுறார்.

வேலு: செல்லன் நீ அவற்றகதையையும் ஒரு கதையெண்டு சொல்லுறியே. அந்தநாளில் அவருக்கு கூட்டணி டிக்கற் குடுத்திருந்தால் அவரும் தமிழ்நாடு சாத்தியம் எண்டு சொல்லுவார். உனக்குத் தெரியுமே சீச்சீ இந்தப்பழம் புளிக்கும் எண்டு ஒரு நரி சொல்லிச்சுதாம் அதுமாதிரித்தான் அவரிட அரசியலும்.

வேலு: அதை நீ பெருமையெண்டு நினைக்கிறியா. இதில இருந்து ஜே. ஆர். ஆட்சியிட மகிமை தெரியுதில்லா அதாவது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதியை விட தங்கட ஆக்களுக்குத்தான் சலுகை செய்யுது. அதோட குமார் சொல்லி அரசாங்கம் செய்யுது எண்டால் குமார் எந்த ஆள் எண்டும் விளங்குதில்லே.

செல்லன்! உதைப்பற்றி புறகு கதைப்பம் அண்ண நான் ஒரு அவசரமான விடயமாய் போறன் பிறகு வாறன் கதைப்பன்.

வேலு! எங்க அப்பிடி அவசரம்.

செல்லன்: தனிசுப் போட்ட மரங்களை யானை கட்டி இழுக்கிறாங்களாம் அதுதான் பாக்கப்போறன் வரட்டே.

# தமிழ் மக்கள் பின்பற்றவேண்டிய ஐந்து அம்சத்திட்டம்!

## மகாத்மா நினைவுநாளில் ஜெயக்கொடி முன்வைத்தார்!

மகாத்மா காந்தியின் முப்பதாம் ஆண்டு சிரார்த்த தினமான தை மாதம் 30ந் திகதி, முன்னாள் உடுப்பிட்டி தே. பே. உ. திரு. க. ஜெயக்கொடி இல்லத்தில் ஓர் கூட்டுப் பிரார்த்தனையும் கருத்தரங்கும் நடந்தது. தமிழ் ஈழம் அமைக்க அகிம்சா முறையில் ஆரம்ப அத்தியாவசிய நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டது. நேரடி நடவடிக்கைப் போராட்டம் முதலியன முற்றாக அகிம்சை முறையில் முடியாதென்றும், ஒத்துழையாமை பகிஸ்கரிப்புடன் தமிழ் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய பஞ்ச சேவைகளைப் பற்றிய திரு. ஜெயக்கொடி விளக்கம் கொடுத்தார். பூதானம், சமாதானம், சமத்துவம், சுதேசியம், சுயபூர்த்தி முதலிய ஐந்து அமசத்திட்டத்தையும் சமர்ப்பித்தார்.

### பூதானம்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் குடியிருக்கவோ, விவசாயம் செய்யவோ நிலம் இல்லாதவர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றார்கள். அந்தநிலை மாற வேண்டும். தமிழ் ஈழத்தில் இருக்கும் கும் தனி ஒருவனுக்கெனினும் சொந்த நிலம் இல்லாதிருக்கப்படாது. அதற்கு, அரசாங்க நிலம் பெற்றுக் கொடுத்தல், தனியார் நிலங்களை விநோபாஜி முறையில் பெற்றுக் கொடுத்தல் குடி



யேற்றத்திட்டங்களை அமைத்தல் போன்ற சேவைகளால் நிறைவேற்றலாம்.

### சமாதானம்

தமிழ் ஈழ மக்கள் ஒருவரோடு ஒருவர் சமாதானமாக வாழ வழி வகுக்க வேண்டும். சச்சரவு ஏற்பட்டால், சிங்கள அரசின் பொலிசிடம் முறைப்பாடு செய்தும். அவர்களின் தயவிலும் நீதிமன்றங்கள் மூலமும் பிரச்சினை தீர்க்க முயலாது, ஒவ்வொரு கிராமத்திலும் சமாதான சபைகளையும், தொண்டர் படைகளையும் அமைத்து நம்மை நாமே ஆள வேண்டும். உள்ளூராட்சி மன்றங்களையும் இத்துறையில் பயன்படுத்தலாம்.

### சமத்துவம்

இன்னும் தமிழ் ஈழத்தில் முக்கியமாக யாழ்ப்பாணத்தில் சாதி ஒழிந்தபாடில்லை ஹரிஜனரில்லா தோருக்குள்ளேயே ஏற்றத்தாழ்வு கடைபிடிக்கப்படுகின்றது. ஒரு சிறுபான்மை தமிழனை தே. பே. உறுப்பினராக்கினால் மட்டும் போதுமா? சாதி ஒழிப்புக்கு தீவிரமாய் இயங்க வேண்டும்.

### சுதேசியம்

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உற்பத்தியாக்கப்படும் பொருள்களையே கூடியவரை பாவிக்க வேண்டும். உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் இருக்கும் வரை அவற்றை உபயோகித்தல், இல்லாத பொருட்களை உற்பத்தி செய்தல் மிகவும் அவசியமாகும்.

### சுயபூர்த்தி

தமிழ் ஈழத்துக்கு தேவையான, முக்கியமாக, உணவு பொருட்களில் தன்னிறைவு காண வேண்டும். நெல் உற்பத்தி மாத்திரமின்றி, குரக்கன், தினை, சாமை, வரகு, சோளம், கடலை, உழுந்து, பயறு முதலிய தானியங்களை அதிக அளவில் உற்பத்தி செய்ய வேண்டும். பனம் பொருட்களை அதிகம் பாவிப்பதோடு பனை உற்பத்தியையும் பெருக்க வேண்டும். பல தொழிற்சாலைகளை அமைத்துத் தமிழ் இளைஞர்கள் சிங்கள அரசில் வேலை தேடாது தமிழ் ஈழத்தில் வேலை வாய்ப்பு உண்டாக்க வேண்டும்;

இந்த பஞ்ச சேவைகளை நடைமுறைப்படுத்தும் படி தமிழர் விடுதலைக் கூட்டணி நடவடிக்கை குழுவுக்கு சிபார்சு செய்வதென தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் ஒவ்வொரு பூரணை தினத்திலும் கூட்டுப்பிரார்த்தனைகள் நடத்தி இப்பஞ்ச சேவைகளையும் கடைப்பிடிக்குமாறு தமிழ் மக்களை வேண்டுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது;

# உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் பின்தள்ளப்படுவது ஏன்?

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் அண்மையில் நடைபெறுவதற்கான அறிகுறி ஒன்றையும் காணோம்.

ஆட்சிக்கு வந்த புதிதில் மூன்று மாதங்களுக்குள் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் நடாத்தப்படும் என்று கௌரவ உள்ளூராட்சி அமைச்சர் 'வாக்குறுதி' அளித்திருந்தார். யூ.என்.பி' கட்சி ஆட்சியில் அமர்ந்து மாதங்கள் ஏழு ஆகியும் தேர்தல் நடைபெறவில்லை.

அமைச்சர் நினைந்திருந்தால் 3மாதங்களுக்குள் தேர்தல்களை நடாத்தி முடித்திருக்கலாம். ஆனால் இந்த அரசும், அரசின் அமைச்சரும் என்ன காரணத்துக்காகவோ தேர்தலை 'ஊறப்போட்டு' விட்டார்கள்.

இலவச அரிசியை நிறுத்தி, சீனி மானியத்தை வெட்டி ஏழை எளிய மக்களது வயிற்றில் பலமாக அடித்துவிட்ட அரசு அந்த மக்களை அணுகி வாக்குப் பிச்சைகேட்க அஞ்சுவது ஒரு காரணமாக இருக்கலாம்.

உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலைச் சந்தித்து வருடக்கணக்காகிவிட்டன. உதாரணமாக யாழ் மாநகரசபைக்கு 1968ல்— அதாவது 10வருடங்களுக்குமுன்தான்- கடைசியாக தேர்தல் நடந்தது.

வரியிறுப்பாளர்கள் வரிப்பணத்தை சுளையாகக் கட்டுகிறார்களே தவிர உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகத்தில் தங்கள் பிரதிநிதிகள்மூலம் பங்குகொள்ளும் வாய்ப்பு ஜனநாயக உரிமை தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு மத்தியில் தேர்தல் நடைபெறலாம் என்று அரசாங்க 'கசட்' பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டிருக்கின்றன. ஆனால் இந்த ஆண்டு முடிவில்கூட தேர்தல் நடைபெறுமா என்பது பலத்த சந்தேகமே!

உள்ளூராட்சி அமைச்சர் உள்ளூராட்சி மன்றத்தேர்தல்களை நடாத்துவதைவிட அந்த மன்றங்களை தனது தொகுதியில் உள்ள வேலையற்றோருக்கு தொழில் கற்றோர் ஆக ஆக்குவதில்தான் மெத்த அக்கறைகாட்டிவருகிறார் எனச் சொல்லப்படுகிறது. முக்கிய எதிர்கட்சி என்ற முறையில் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை விரைவில் நடாத்த அரசையும், அமைச்சரையும் நிர்ப்பந்திக்கும் பொறுப்பு முக்கியமாக உண்டு.

# நியாயம் கோரிய 15,000 ஆசிரியர்கள் மீது குதிரைப்படை தாக்குதல்.

நீதி நியாயம் கேட்பதற்காக கல்வியமைச்சின் முன்னால் குழுமிய சுமார் பத்து தொழிற்சங்கங்களைச் சேர்ந்த 15,000க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் குதிரைப் படைவீரர்களால் குண்டாந்தடிகொண்டு ஓட ஓட விரட்டியடிக்கப்பட்டனர். 'தர்மிஷ்ட' ஆட்சியிலேதான் இக்கொடுமை நிகழ்ந்துள்ளது.

கொழும்பில் கல்வியமைச்சுக்குமுன் 31-1-78 பிற்பகல் பத்துத்தொழிற்சங்கங்களைச் சேர்ந்த 15,000க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் திரண்டு, இலவச பங்கீட்டரிசி ரத்து, அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையேற்றம், நாணயப்பெறுமதி [illegible] 20,000 ஆசிரியர்கள் இடமாற்றம், பாடப்புத்தகங்கள் விலை குறைக்கப்படாமை, போன்ற பிரச்சினைகளையொட்டி தமது அதிருப்தியை தெரிவிக்க வந்தனர்.

தங்கள் மனக்கொதிப்பை அமைதியான முறையில் தெரிவிக்கவந்த ஆசிரியர்கள், பொலிசாரால் ஓட ஓடத் துரத்தியடிக்கப்பட்டனர்: இரண்டுவான்கள் நிறைய கேடயம், துப்பாக்கி சகிதம் வந்திறங்கிய பொலிசாரும், குதிரைப்படை பொலிசாரும் சேர்ந்து ஆசிரியர்களை விரட்டியடித்தனர். தர்மிஷ்ட ஆட்சியில் கல்வியூட்டும் ஆசிரியர்களுக்கு நேர்ந்த இக்கதிபற்றி எதிர்க்கட்சித்தலைவர் தேசியபேரவையில் கேள்விஎழுப்புவார்.

# இலவசம்

சிவராத்திரி தினத்தன்று சமயதீட்சை வைக்கும் சபைகளுக்கு யாழ்ப்பாணம் 'மில்க்வைற்'' தாபனத்தார் சைவ அநுட்டான விதி என்னும் சிறந்த நூலை இலவசமாக வழங்குகின்றார்கள். தேவையான சபைகள் அவர்களோடு தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகஸ்ட் கலவரத்தின் பின்னணி

# அரசியலா? இனக்குரோதமா?

1977 ஆகஸ்ட் வன்செயல்கள் பற்றி விசாரிக்கும் கமிஷனுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் தொண்டைமான் அவர்கள் சமர்ப்பித்த விண்ணப்பத்தை 15-1-78 "காங்கிரஸ்" இதழில் பார்த்தேன். பாதிக்கப்பட்ட இந்திய வம்சாவழித் தமிழர்களுக்குக் கூடிய உதவிகளும் மறுவாழ்வு வாய்ப்புகளும் கிடைக்கச் செய்வதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு உள்ள பெரிய ஆர்வம் விண்ணப்பத்தில் தெளிவாகப் புலப்படுகிறது. இது, பாராட்டுக்கும் மகிழ்ச்சிக்கும் உரியது.

## டாக்டர் சாலை இளந்திரையன் கருத்து!

ஆனால், இந்த விண்ணப்பத்தில் வன்முறைக்குக் காரணமாகக் குறிக்கப்படும் கருத்தில் சிறிய குழப்பம் இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது; "வன்முறைத் தாக்குதலுக்கு இனவெறி காரணமல்ல,— அரசியல் காழ்ப்பு உணர்ச்சியே காரணம்" என்று இ. தொ. காங்கிரஸ் கருதுவதாகத் தெரிகிறது. இந்த அறிக்கையில் உள்ள பின்கண்ட பகுதி இதை உறுதி செய்கிறது: "வன்செயல் நடந்த பகுதிகள், இதில் சம்பந்தப்பட்டவர்கள், இந்தவன்செயலால் பாதிக்கப்பட்டவர்கள், இந்த வன்செயல்கள் நடந்தமுறை, சூழ்நிலை எல்லாவற்றையும் ஆராய்ந்தால், இது முழுமையும் அரசியல் நோக்கம் கொண்டதேயன்றி வேறல்ல என்பது தெளிவாகும். தாக்கியவர்களும் தாக்கப்பட்டவர்களும் தெளிவான அரசியல் சார்புகொண்டவர்களாகவும் சென்ற தேர்தலில் பிரதான பங்கு கொண்டவர்களாகவுமே இருப்பது தெளிவு."

இ. தொ. கா. கருத்துப்படி தாக்குதலுக்குஉள்ளான தமிழர்கள் இப்போதுஆளும் கட்சியாக உள்ள ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்து வேலை செய்தார்கள்என்றும், இந்த (யூ. என். பி.) கட்சிக்கு எதிரானவர்களே தாக்குதல்களை நடத்தினார்கள் என்றும் தெரிகிறது; ஆனால், விண்ணப்பத்தில் உள்ள வேறு சில குறிப்புகள் இதற்கு முற்றிலும் மாறுபட்ட எண்ணத்தை உண்டாக்குகின்றன. அத்தகைய பகுதிகள் பின்வருவன!

"தாக்கப்பட்டவர்கள், உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்கள், சொத்தை இழந்தவர்கள் இவர்கள் எல்லாருமே இலங்கையர்களும் இந்திய வம்சாவழியினருமான தமிழ் இனத்தைச் சார்ந்தவர்கள்.

"தமிழரல்லாத இந்தியர்கள் தாக்கப்படவில்லை.

"இன உணர்ச்சித் தூண்டுதலின்மூலம்பெரும்பான்மை இனத்தவர்களை அவர்கள் எந்தக்கட்சி சார்பினர்என்ற பாகுபாடு ஏதுமின்றி வன்செயலில் ஈடுபட ஒன்றுசேர்க்க முடிந்தது.


"இந்த வன்செயலில் இளைஞர்கள் அதி தீவிரமாகப் பங்குகொண்டது ஒரு புதிய ஆபத்தான அம்சமாகும். இந்த வன்செயலில் இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், இந்த வன்செயல் தாக்குதல்களைத் தொடர்ந்துநடந்தகொள்ளை, சூறையாடல்களில் பெண்களும் சிறுவர்களும் பங்கு கொண்டதாகும்?"

இந்தக் குறிப்புகளின்படி பார்த்தால், சிங்களவர்கள், தங்கள் கட்சி வேற்றுமைகளை மறந்து ஒன்றுசேர்ந்து நின்று தமிழர்களைத் தாக்கினார்கள் என்பது தெளிவாகிறது; இந்தியர்களிலே கூட, மற்ற இனத்தவரை விட்டுவிட்டுத் தமிழர்களை மட்டுமே தாக்கினார்கள் என்பதும் தெரிகிறது! இப்படியாக,—இலங்கையர் இந்தியர் என்ற பாகுபாடோ, ஆளும் கட்சியினர் எதிர்க்கட்சியினர் என்கிற பாகுபாடோ இல்லாமல்,—இந்திய வம்சாவழியினரும் இலங்கையருமான தமிழர்கள் மட்டுமே சிங்களவர்களால் தாக்கப்பட்டிருக்கும் போது, அதை இனவெறி என்று சொல்லாமல், அரசியல் காழ்ப்பு என்றுசொல்லுவது எப்படி?

அப்பால்,— சிங்கள இளைஞர்களும் பெண்களும் பள்ளிச் சிறுார்களும் கூடத் தமிழர்களைத் தாக்குவதில் முன்நின்றிருக்கிறார்கள். தீவிரமான இடதுசாரி (இளைஞர்) இயக்கங்களும், மாஸ்கோ கம்யூனிஸ்டுகள், சீனக் கம்யூனிஸ்டுகள் போன்றவர்களின் கட்சிகளும் செயல்படும் சிறீலங்காவிலே, உழைப்பாளிகளான சிங்களவர்களே உழைப்பாளிகளான தமிழர்களை வெட்டிச் சாய்த்து வெறியாட்டம் ஆடியுள்ளார்கள். அப்படியானால், தொழிலாளர் இயக்கங்களை எல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு, அங்கே தமிழர் எதிர்ப்பு இனவெறி தாண்டவமாடுகிறது என்பது தெளிவாகவில்லையா?

விண்ணப்பத்தின் வேறோர் இடத்தில், "தமிழர்களுக்கு விரோதமான இந்த வன்செயல் சம்பவங்களில் பொலீஸ் பொதுவாகத் தூண்டுதல்காரர்களாகவோ அல்லது யாதொரு நடவடிக்கையும் எடுக்காமல் சும்மா பார்த்துக் கொண்டிருந்தவர்களாகவோதான் இருந்தனர்" என்னும் குறிப்பு உள்ளது; அப்படி என்றால், போலீசார் அனைவரும் யூ. என். பி. ஆட்சிக்கு எதிராகச் செயல்பட்டார்கள் என்று ஆகிறது; அல்லது அவர்கள் அனைவரும் சிங்கள வெறியிலே செயல்பட்டார்கள் என்று ஆகிறது; இந்த இரண்டிலே எது உண்மை? ஓர் அரசாங்கத்தின்போலீஸ் படை முழுதும் வன்முறையைத் தடுக்காமல் இருந்தது என்றால், (அங்கே உள்ள சூழ்நிலையில்) இனவெறி காரணமாக அப்படிச் செயல்பட்டது என்று நினைக்கவே சாத்தியக்கூறு மிகுதியாக உள்ளது.

இந்தச் செய்திகளைக் கொண்டு பார்க்கும்போது, சிறீலங்காவின் கடந்தகால ஆட்சிகள் சரியான பொருளாதாரத் திட்டங்களை வகுத்துச்செயல்படுத்தாததால், அங்கே இனவாதம் மிக எளி



தாகக் கொழுந்துவிட்டு எரியக் கூடிய சூழ்நிலை தொடர்ந்து இருந்து வருகிறது என்றே நினைக்க வேண்டியுள்ளது. ஆகவே, சிறீலங்காவின் பொருளாதாரக் கோளாறுகளும், அவைகளை மறைப்பதற்காக அரசியல்கட்சிகள் எழுப்பி வருகிற சிங்கள இனவெறியுமே 1977 ஆகஸ்ட் வெறியாட்டங்களுக்குக் காரணங்களாக இருக்க வேண்டும் என்று முடிவுசெய்யத் தோன்றுகிறது.

இ. தொ. காங்கிரசின் பணிகளையோ நன்னோக்கையோ எந்த விதத்திலும் நான் குறைத்து மதிப்பிடவில்லை. அங்குள்ள நிலைமைகளைக் கணக்கில் கொண்டே, காங்கிரஸ் இந்த விண்ணப்பத்தைத் தயாரித்திருக்கும் என்பதிலும் ஐயமில்லை. என்றாலும், விண்ணப்பத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள செய்திகள் இப்படி ஒரு எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றன என்பதைத் தெரிவிக்கவே இதை எழுதினேன்.

## செல்வாவின் பெயரால் நிதி மோசடி!

"சங்கிலியன் தோப்பு தமிழ் இளைஞர் மன்றம்" என்ற பெயரில் தந்தை செல்வா அவர்களுக்கு சிலை நிறுவுவதாக கூறி சிலர் பொய்யான டிக்கெட்டுக்கள் அடித்து தமிழ்மக்களிடையே பணம் திரட்டுவதாக அறிகிறோம். பதுளை, கொழும்பு, வவுனியா, மன்னார் போன்ற இடங்களில் இத்தகைய போலி டிக்கெட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டதாகவும் அறிகிறோம்.

வவுனியாவில், வவுனியா பா. உ.வினால் கையும்மெய்யுமாக பிடிக்கப்பட்ட இந்த மோசடிக் காரர்கள், பின்னர் மன்னிப்புக்கோரியதன்பேரில் விடுவிக்கப்பட்டார்கள் என்றும், இதே நபர்கள் மீண்டும் மன்னாரில் தங்கள் ஏமாற்றுவித்தையை தொடர்ந்தபோது, அங்குள்ள கூட்டணி ஆதரவாளர்களால் கையும் களவுமாக பிடிக்கப்பட்டு, மன்னார் பொலிசில் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

தமிழ் பொதுமக்கள் தெளிவாகத் தெரியாமல், இத்தகைய மோசடிக் கும்பலிடம் ஏமாறுதிருக்கும்படி சுதந்திரன் எச்சரிக்கிறது.

## தன்மானம் காத்த தமிழ் மாணவியர்!

சிங்களத்தை திணிக்க நிற்கும் ஐக்கிய தேசியக்கட்சியின் கல்வி மந்திரியான திரு. நிசங்க விஜயரத்தின அவர்களின் பருத்தித்துறை மகளிர் கல்லூரி வருகை கைவிடப்பட்டது: மகளிர் கல்லூரி அதிபர் செல்வி.மான் வரவேற்பு அளிப்பதாகவும் மகளிர் கல்லூரி மாணவிகள் நாடகங்களையும்நடனங்களையும் மேடை ஏற்றுவார்கள் என்றும் கூறப்பட்டது. எனினும் கல்வி அமைச்சரின் வருகையை பகிஷ்கரிக்குமாறு த.இ. பேரவை செந்துராசாவின் வேண்டுகோள் பலித்து விட்டது.

மகளிர் கல்லூரி பெண்கள் தமக்குள் ஒரு மாநாடு ஒன்றை கூட்டி கல்விஅமைச்சர் வரவேற்பை நாம் முற்ருக பகிஷ்கரிக்க வேண்டும் என்று சிந்தித்தார்கள் ஏனெனில் லண்டனில் [illegible] போன்ற தமிழ் மாணவர்கள் சிறைச்சாலைகளை நாடுகின்ற அளவிற்கு தம் பட்டப்படிப்புக்களையே துறந்து ஈழத் தமிழருக்காக வீரக்குரல் எழுப்பிக் கொண்டு இருக்கும் வேளையிலே அந்த தமிழ் மண்ணிலே சிங்கள அமைச்சருக்கு வரவேற்பாம் என்று சொல்லும் போது எமக்கு மட்டுமல்ல எம்இனத்துக்கே அவமானம் இது மட்டும் அன்றி சிங்கள அமைச்சர்கள் லண்டனுக்கு சென்றால் கறுத்தக்கொடி ஆர்ப்பாட்டம். ஆனால் பருத்தித்துறை மகளிர் கல்லூரிக்கு வந்தால் மாலையிட்டு மங்கள வரவேற்பு என்றால் எம் இனத்தைப் பற்றி எப்படித் தூற்றுவார்கள் என்று சிந்தித்து, மாநாட்டில் கேள்வி எழுப்பி கல்வி அமைச்சரின் வரவேற்பை முற்ருக பகிஸ்கரிக்க வேண்டும் என்று தீர்மானம் எடுத்தார்கள். இத் தீர்மானத்தின் பின்னணியில் கல்வி அமைச்சரின் வருகை நிறுத்தப்பட்டது.

இப்படிபட்ட வரவேற்புக்களையெல்லாம் பகிஷ்கரித்து ஒரு தேசிய சாதனையை நிலைநாட்டியது வேம்படி மகளிர் கல்லூரி. அக்கல்லூரியின் ஒரு சாதனை விளையாட்டு விழா ஒன்றிற்கு வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் ஒரு சிங்கள அமைச்சரை வரவேற்ருர். அப்பாடசாலை மாணவிகள் விளையாட்டு விழாவை முற்ருக பகிஷ்கரித்தனர்,

அதேபோலத்தான் ஹாட்லிக்கல்லூரியிலும் கூட கடந்த வருடம் விளையாட்டுத்துறை அமைச்சரும் போக்குவரத்து அமைச்சருமான திரு. கே. பி. இரத்நாயக்கா அவர்கள் பாடசாலையைப் பார்வையிட வந்தபோது கல்லூரி இந்துமாமன்றத் தலைவர் ச. செந்துராசா அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அமைச்சருக்கு கறுத்த கொடிகாட்டி "விளையாட்டுத் துறை அமைச்சரே எமது கல்லூரியில் விளையாட்டுத் துறை முற்ருக மங்கக கொண்டு போறகிது இதைப் பார்த்துக்கொண்டு இருக்கும் கொடூர அமைச்சரே எமது கல்லூரியில் காலடி வைக்காதே" என்று கல்லூரியில் இயங்கி வரும் ஜெட் எதிர்ப்பியக்கம் வீரக்கோசம் எழுப்பியது. அந்த அமைச்சர் கல்லூரி விழாவில் கலந்து கொண்டாரா? —இல்லை.

இதேபோலத்தான் பருத்தித்துறை மகளிர் கல்லூரி மாணவிகளும் செய்ய இருந்தார்கள். அதனால் அந்த அமைச்சரின் வரவு நிறுத்தப் பட்டு விட்டது.

—வி, விஜயகுமார்
தெனபுலோலியூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது,

# நீதிமன்றத்திலும் 'தமிழ் நாடு' கோரிய தனிப்பெருந் தலைவர்

## நாளை அமரர் ஜி. ஜி. நினைவுதினம்



அமரர் ஜி. ஜி. அவர்கள் இறைவனடி சேர்ந்து இன்று ஓராண்டாகிவிட்டது. ஆனால், அவர் பொதுவாக இலங்கை வாழ் மக்களுக்கும் சிறப்பாகத் தமிழ் இனத்திற்கும் சட்டத்துறையிலும், அரசியற் துறையிலும், சமய ஈடுபாட்டிலும் ஆற்றிய சேவைகள்-தொண்டுகள் என்றும் மறக்க முடியாத வகையில் மக்களின் மனதிற் பசுமரத்தாணி போன்று பதிந்துவிட்டன.

அமரர் அவர்கள், கடந்த 40 வருட அரசியற் சேவையில் ஒற்றுமையின்றிப், பலமின்றிப், பலகூறுபட்ட தமிழ் இனத்தை, அமரர் தந்தை செல்வநாயகத்தின் அறைகூவலுக்கும் வேண்டுகோளுக்கு மிணங்கித், தமிழர் கூட்டணிஎன்னும் ஒரு பலப்பட்ட, அசைக்க முடியாத தனி அணியின் கீழ்க்கொண்டு வந்து அதில் தலைமைப் பீடங்களில் ஒன்றைத்தாங்கித் தமிழ் இனத்தை 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்ற நிலைக்குக் கொண்டுவந்துவிட்டசேவை சிறப்புக்கும், பாராட்டலுக்கும் உரியதாகும்.

அத்துடன் இன்றைய எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் மற்றும் மூவரும் சட்ட மறுப்பாகத் தமிழ் நாட்டுக் கோரிக்கைகளைப் பிரகடனப்படுத்தியதில் அவர்களுக்கு எதிராக 'ரையல்-அற்-பார்' கோட்டில் தொடரப்பட்ட வழக்கில் அமரர் அவர்கள் ஏற்பட்டுச் சட்ட நுணுக்கங்களையும், மனிதாபிமான நுணுக்கங்களையும் இடித்துரைத்து திரு. அமிர்தலிங்கம் அவர்களையும், அவரின் மற்றைய மூன்று சகாக்களையும் சுற்றவாளிகளாக்கி விடுதலை செய்வித்ததுடன், கோட்டில் அவரின் இறுதித் தொகுப்புரையின் முடிவில், தமிழினத்தின் கோரிக்கைகள் மறுக்கப்படுமிடத்து, இலங்கையிலுள்ள தமிழினம், இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்தது போற் பிரிந்து தமிழ் நாடமைப்பதை விட வேறு வழியில்லை'யெனத் திட்டவட்டமாகவும் கூறிவைத்தார்.

அமரர் அவர்கள் என்னுடன் எப்போதும் மிக ஊடாட்டமாகவும், நெருங்கியும் அளவளாவுவது வழக்கமாக இருந்து வந்தது. ஒரு முறை 1967ம் ஆண்டு' பருத்தித் துறையில் நடந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் 22ம் மகாநாட்டில் அமரர் ஜி.ஜி. அவர்கள் பங்குபற்றி விட்டு யாழ்ப்பாணத்திலுள்ள பாம் கோட்டில்ஓய்வு எடுக்கும் நேரத்தில், நான் 'சேர்! உங்களை ஒரு கேள்வி கேட்கவிரும்புகிறேன்' என்று கூற அதற்கு அவர், 'கேளன்' எனச் சொன்னார். நான் அதற்கு, உங்களுக்குப்பின் கிறிமினல் சட்டத்துறையிலும் அரசியலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தாபனத்திலும் உங்களிடத்தை நிரப்பக்கூடியவர்கள் யாவர்? எனக் கேட்டேன். உடனே அவர் சுங்கானை வாயிலிருந்து எடுத்துவிட்டுச் சிரித்துக்கொண்டு, இப்படியான கேள்விகளை இதுவரை என்னிடம் ஒருவரும் கேட்டதில்லை, அத்துடன் கேட்கவும் துணியமாட்டார்கள். ஆனால் நீ என்னிடம் துணிவுடன் கேட்டதையிட்டுச் சந்தோஷப்படுகிறேன்' என்று கூறி, "கிறிமினல் சட்ட நிபுணத்துவத்தில் எனக்குப் பின் கலாநிதி, கொல்வின் ஆர். டி சில்வா அவர்களும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசில் எனது இடத்தைக் கொண்டு நடத்துவதற்கு உடுப்பிட்டி சிவாவும்தான்" எனக் கூறினார். அவரின் நினைவுபோல் திரு. மு. சிவசிதம்பரம் கட்சியின் தலைவர் பதவியை ஏற்று இயங்கிவருகிறார்;

எல்லோரும் இன்று அமரருக்கு அஞ்சலி செலுத்தும் வேளையில், தமிழினத்தின் இன்றைய இக்கட்டான நிலையில் அமரர் ஜி. ஜி.யின் நினைவுகளையும், கனவுகளையும் ஈடேற்றிச் செல்வதற்கும் அவரின் ஆத்மா சாந்தியடைவதற்கும் அவரின் அருமைப் புதல்வன் திரு. குமாரும் அவரைச் சேர்ந்தவர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் ஒத்துழைக்குமாறு வேண்டுகின்றேன்.

க. முருகரெத்தினம்
செயலாளர் த. வி. கூ.
கந்தர் மடம் கிளை.

---

● ஒரு கருத்து

# மாவட்ட மந்திரி பதவியும் த. வி. கூட்டணியும்

தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் ஒருவர் தமது தொகுதியை உள்ளடக்கிய மாவட்டத்துக்கு அமைச்சராக வருவது பொருத்தமாக விருக்கலாம். ஆனால் அவர் அரசினால் நியமனம் பெற்று அமைச்சராகிற போது அவர் தமது அதிகாரத்தை மக்களிடம் பெறுகிறாரா அல்லது அரசாங்கத்திடம், அதாவது மந்திரி சபையிடம் பெறுகிறாரா என்பது தான் முக்கிய கேள்வி. இந்த அமைச்சர் அரசாங்கத்தின் அதிகாரத்துடன் இயங்குவதானால் அவர் சுதந்திரமாக, மக்கள் விரும்பிபபடி சேவை செய்ய முடியாது. அவர் அரசு பணித்தவாறு, அதற்குஅடிபணிந்து கடமையைச் செய்ய நேரிடும்.

மாவட்ட அமைச்சரின் கடமை, அதிகாரமென்ன? அரசுக்கும் இந்த அமைச்சருக்கும் சம்பந்தமென்ன? மத்திய அமைச்சுக்கு கட்டுப்பட்டவரா அல்லது தனித்தியங்குபவரா? இன்னோரன்ன கேள்விகள் பல கோணங்களிலிருந்து போடப்படும் அரசு இன்றும் தான் விடை அளிக்கவில்லை; மௌனம்சாதித்துவருகிறது! இளைப்பாறிய நீதியரசர் திரு. மாணிக்கவாசகர் கூட்டணி உறுப்பினர் மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்கும்படி யோசனை கூறுவதை, இப்படியான சூழ்நிலையில், நன்கு அராய்ந்துதான் கையாள வேண்டியுள்ளது.

மாவட்ட அமைச்சரின் கடமைகள் என்னவாக இருக்கும் என்று ஊகித்து கூட்டணியினர்இப்பதவியை ஏற்பதும் ஏதம் விளைவிப்பதாக விருக்கும். திட்டவட்டமாக அறிந்து தமிழ் மக்களுடைய சுதந்திரத்துக்கும் முன்னேற்றத்துக்கும் வழிவகுக்குமென்றால் கூட்டணியினர் இதைஏற்பது நல்லது. நன்கு ஆராயாது கொடுத்தவாறே ஏற்க வேண்டுமென்றால் நல்ல ஊர்க்கத்தரிக்காய் தேடிப் போனவனைப் பிடித்து சுண்டங்காயைச் சுமத்திவிடுவது போலாகும்!

இந்த மாவட்ட மந்திரி பதவி எந்நாட்டிலும் நாம் காணாத ஒன்றாகும். சாதாரணமாக மாவட்ட சபைகளை மக்களின் வாக்குரிமைத் தெரிவு மூலம் மாவட்ட அமைச்சர்களை நியமிப்பது வழக்கம்.

உலகறிந்த அரசியல் ஞானிகளான திரு. இராசகோபாலாச்சாரியர், திரு. அசேக் மேதா போன்றவர்கள் இலங்கைக்கு சமஷ்டி ஆட்சியே பொருத்தமானது என்று கூறியும் சிங்கள அரசாங்கங்கள் செவிமடுக்கவில்லை. இங்கும் சில பிரமுகர்கள் பிரதேச சுயாட்சி முறையை சிபார்சு செய்து வருகின்றனர். அரசாங்கம தமது அதிகாரத்தை பரவலாக்க விரும்பாத காரணத்தால் பிரதேசசுயாட்சிமுறையைத் தட்டிக்கழித்து வருகிறது.

மாவட்ட அமைச்சர்பதவி என்ற சூழ்ச்சியால் மக்கள் தெரிவு செய்யும் மாவட்ட சபைகளையும், அவைகளின் அதிகாரத்தையும் தவிர்க்கலாமென்று அரசாங்கம் திட்டமிடுகிறது. இதன் காரணமாகத்தான் அரசு மாவட்ட அமைச்சரின் நிலையையும், அவரின் அதிகாரத்தையும் விளக்கிக்கூற விரும்புகிறதில்லை.

தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாவட்ட சபையின் அதிகாரத்தையே மாவட்ட அமைச்சர் பெற்றிருத்தல் வேண்டும். இப்படியில்லாத மாவட்ட அமைச்சர் பதவியை தமிழ் உறுப்பினர் ஏற்கும் போது தமிழ் மக்களின் சுதந்திரத்துக்கும் முன்னேற்றத்துக்கும் குந்தகம் விளைவிக்குமோவென்று ஆராய வேண்டும். இதற்கு இடையூறுகச் சிறுதளவிலேனும் சந்தேகமிருப்பின் இந்த அமைச்சர் பதவியைத் தமிழ் உறுப்பினர் எவரும் ஏற்கக் கூடாது. எந்தத் எந்தத்தற்காலிக அமைப்பும் தமிழ்ஈழக் கோரிக்கையைப் பாதிக்காது.

— சி. பொன்னையா
(சட்டத்தரணி)

---

# வத்தளை தமிழர்களின் எதிர்காலம் என்ன?

வத்தளை, எந்தல, எலகந்தை வட்டாரங்களில் கனிசமாக வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் ஆகஸ்ட் கலவரத்திற்குப் பிறகு பெரும் சோதனைக்குள்ளாகி வருகிறார்கள், முக்கியமாக தமிழ்ப் பிள்ளைகளின் கல்வியிலும், கத்தோலிக்க தமிழ் மக்களினது வழிப்பாட்டு பூசையிலும், இனப்பிரச்சனை ஊடுருவி வத்தளை வாழ் தமிழ் மக்களது எதிர்காலம் இருள்சூழக் கூடியதாக திட்டமிட்டு இப்பிரச்சனைவளர்ந்துவருகிறது. இப்பிரச்சனை கொழும்புக்கு பக்கத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு நடக்கும் போது நாளைக்கு மத்தியகொழும்பில் வாழும் தமிழ் மக்களுக்கும் நடக்காது என்பதில் என்ன சந்தேகம்?

வத்தளைத் தேர்தல் தொகுதியில் வாழும் எண்ணற்ற தமிழ்ப் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு புனித அந்தோனியார் ஆண்கள் வித்தியாலயம், புனித அன்னம்மாள் பாலிகமகளிர் வித்தியாலயம் ஆகியஇரண்டுந்தான்இயங்கி வருகின்றது. புதிய வருடத்திற்காக முதல்வகுப்பில் தங்கள் குழந்தைகளை சேர்ப்பதற்கு பெற்றோர் புனித அன்னம்மாள் பாலிகமகளிர் வித்தியாலயத்திற்கு 167 விண்ணப்பங்கள் கொடுத்திருக்க, 40 குழந்தைகளுக்குமட்டுமே பாடசாலையில் சேர அனுமதி வழங்கப்பட்டது. சில இனவாத விஷமிகளின் செயலால் 1978 ஜனவரி 9-ம் திகதி தமிழ்ப் பிரிவின் முதல் வகுப்பைதமிழ்ப்பிள்ளைகளின் வரவு குறைவு என்று கூறி மூடிவிட்டார்கள். இதையறிந்த தமிழ்ப் பெற்றோரும் ஆசிரியரும் இதற்குரிய நியாயங்களை வித்தியாலய அதிபரிடம் எடுத்துரைத்ததன் மூலம் மீண்டும் இம்மாதம் ஜனவரி 13-ம் திகதி திறந்து விடப்பட்டது.

எப்படியாயினும் இவ் வட்டாரத்திலிருந்து இந்த தமிழ்ப்பிரிவை மூடிவிடுவதற்கு சில விஷமிகள் திட்டமிட்டு செயல்பட்டு வருகிறார்கள். அதுமட்டுமின்றி படிக்க வரும் தமிழ் மாணவ மாணவிகளை பரிகாசம் செய்து, அவமானத்துக்குள்ளாக்கி வருகிறார்கள். இதனால் இங்கு படித்த தமிழ் மாணவர்கள் வேறு பள்ளிக்கூடங்களைத் தேடிச் செல்லக் கூடிய சூழ்நிலை உருவாகிவிட்டது. இவைகள் இப்படியே தொடர்ந்தால் தமிழ்ப்பிரிவு, தானாகவே மூடிவிடக்கூடிய சூழ்நிலை ஏற்படும்.

இத்தகைய அவமான நிலை ஏற்படாவண்ணம் தமிழ்ப் பெற்றோர்கள் தடுக்கமுற்பட வேண்டும். சில பெற்றோர் தம் பிள்ளைகளை கொழும்பிலுள்ள பாடசாலைகளுக்கு சேர்க்க இடந்தேடி அலைவதால், கொழும்பிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதென்பதையும், போதிப்பதற்குரிய தமிழ் ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருப்பதையும் இங்கு முக்கியமாக சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இங்குவாழும்கத்தோலிக்க தமிழ் மக்களின் நலனுக்காக மாதத்தில்சனிக்கிழமைமாத்திரம் தமிழில் பலிபூசை ஒப்புக் கொடுப்பதற்கு இடம் தரப்பட்டது. ஆனால்ஆகஸ்ட் கலவரத்துக்குப் பிறகு பலிபூசை ஒப்புக் கொடுக்க தமிழ்க் குருவானவர்கள் முன்வரத் தயங்குகிறார்கள். அதனால் இங்குள்ள தமிழ் மக்கள் கொழும்பிலுள்ள தேவாலயங்களைநாடி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதை குறிப்பாக சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஞானஒடுக்கத்தையும் இப்போது கைவிட்டுவிட வேண்டிய நிலைக்கு வந்துவிட்டார்கள்.

வத்தளைப் பகுதி தமிழ் மக்களின் இத்தகைய பிரச்சனைகளை வத்தளைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும், கருதினால் ஆண்டகை அவர்களும் இதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்து உடன் நிவாரணம் வழங்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

—ஜெனிபர் பெர்னாண்டோ.
ஜிந்துப்பிட்டி
கொழும்பு 13

---

# இடமாற்றத்துக்கு த. தொ. கூட்டணி எதிர்ப்பு

தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளரும், தமிழ்அகதிகள் புனர்வாழ்வுச் சபை வவுனியாகிளைச் செயலாளருமாகிய திரு. டேவிற் நாகநாதன் அவர்கள் வவுனியா பகிரங்க வேலைப்பகுதியில் பணியாற்றிவருகின்றார். சென்ற வருடம் தான் வவுனியாப்பகுதிக்கு இடமாற்றலாகிவந்த திரு. டேவிற் அவர்கள் 15-2-78லிருந்து அனுராதபுரத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார். ஒரு அரசியல் இயக்கத்தின் முக்கியத்தரின் தூண்டுதலால் நடைபெற்றிருக்கும் இந்த இடமாற்றத்தை தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி ஆட்சேபித்துள்ளது. இவரது இடமாற்றத்தை இரத்துச்செய்யுமாறு நீர்ப்பாசன நெடுஞ்சாலை அமைச்சர் திரு. காமினி திசநாயக்காவை தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. இ. தி. சம்பந்தர் கேட்டுள்ளார்.

---

## மில்க்வைற் மேலுறைகள்

"மில்க்வைற்" மேலுறைகள் நம்பிக்கையின் சின்னம், அன்றி காசுத்தாள்கள்போல மதிப்புடையவை. எனவே எங்கள் மேலுறைகளைக் கவனித்து எங்கள் தயாரிப்புக்களை வாங்குங்கள்,

—மில்க்வைற் யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை கொழும்பு - 12, 194 ஏ. பண்டாரநாயக்க வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8ம் திகதி புதன் கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது: அச்சுப் பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org